ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2190/17 - 2020 අගෝස්තු මස 24 වැනි සඳුදා - 2020.08.24
*2190/17 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 24 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி அவர்களினால் செய்யப்படும் பிரகடனம்

(முத்திரை)

**கோட்டாபய ராஜபக்ஷ**

*சனாதிபதியின் பணிப்புரை*

1. தொல்பொருள் சக்கரவர்த்தி வணக்கத்துக்குரிய எல்லாவல மேதானந்த நாயக்க தேரர் அவர்கள்
2. வடக்கு மற்றும் கிழக்கு ஆகிய இரு மாகாணங்களின் மற்றும் தமன்கடுவ பிரதேசத்தின் பிரதம சங்கநாயக்க அரிசிமலே ஆரணியத்தின் சேனாசனாதிபதி வணக்கத்துக்குரிய பனாமுரே திலகவங்ச நாயக்க தேரர் அவர்கள்
3. மேஜர் ஜெனரால் (ஓய்வுபெற்ற) கமல் குணரத்ன அவர்கள்
   செயலாளர், பாதுகாப்பு அமைச்சு
4. கலாநிதி செனரத் பண்டார திசாநாயக்க அவர்கள்
   தொல்பொருள் பணிப்பாளர் நாயகம்
5. திருமதி. சந்திரா ஹேரத்
   காணி பணிப்பாளர் நாயகம்

6. திருமதி ஏ.எல்.எஸ்.சி.பெரேரா
நிலஅளவையாளர் நாயகம், நிலஅளவையாளர் திணைக்களம்

7. பேராசிரியர் ராஜ் குமார் சோமதேவ அவர்கள்
சிரேட்ட விரிவுரையாளர், களனி பல்கலைக்கழகம்

8. பேராசிரியர் கபில குணவர்த்தன அவர்கள்
பேராதனை பல்கலைக்கழகம், வைத்திய பீடம்

9. தேசபந்து தென்னக்கோன் அவர்கள்
சிரேட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர், கிழக்கு மாகாணம்

10. திரு.எச்.ஈ.எம்.டப்ளிவ்.ஜி.திசாநாயக்க
மாகாண காணி ஆணையாளர், கிழக்கு மாகாணம்

11. திரு.திலித் ஜயவீர
தலைவர், தெரண ஊடக வலையமைப்பு

12. ரியர் அத்மிரால் ஆனந்த பீரிஸ் அவர்கள்
பணிப்பாளர் நாயகம், சிவில் பாதுகாப்புத் திணைக்களம்

ஆகியோருக்கு,

வாழ்த்துக்கள்!

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 33 ஆம் உறுப்புரையினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பிரயோகித்து, 2020.06.01 ஆந் திகதிய சனாதிபதியின் பணிப்புரையின்மூலம் தாபிக்கப்பட்ட கிழக்கு மாகாணத்தினுள் தொல்பொருள் மரபுரிமைகளை முகாமை செய்வதற்கான சனாதிபதி செயலணியின் உறுப்பினர்களாக தாங்கள் நியமிக்கப் பட்டுள்ளதாதலாலும்,

கிழக்கு மாகாணத்தினுள் தொல்பொருள் மரபுரிமைகள் அதிகளவில், பௌத்த மதம்சார்ந்த பின்னணியிலும் மற்றும் அப்புனிதஸ்தலங்களைச் சார்ந்தும் இருப்பதினால், இம்மரபுரிமைகளை இனங்காணும்போது மற்றும் முகாமை செய்யும்போது கௌரவ மகா சங்கத்தினரின் ஆலோசனைகள் மற்றும் அறிவுரைகள் மேலும் தேவைப்படுகின்றதென இனங்காணப் பட்டுள்ளதாதலாலும்,

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதிப் பதவியை வகிக்கும் கோட்டாபய ராஜபக்ஷ ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 33 ஆம் உறுப்புரையினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பிரயோகித்து, கீழே பெயர் குறிப்பிடப்படும் பிக்குமார்கள் ஆகிய உங்களின் விவேகம், திறமை மற்றும் பற்றுறுதி என்பவற்றின்மீது மிகுந்த நம்பிக்கை வைத்து, மேற்குறிப்பிட்ட சனாதிபதியின் பணிப்பாணைமூலம் தாபிக்கப்பட்ட கிழக்கு மாகாணத்தினுள் தொல்பொருள் மரபுரிமைகளை முகாமை செய்வதற்கான சனாதிபதி செயலணியின் உறுப்பினர்களாக இத்தால் நியமிக்கின்றேன்.

1. அஸ்கிரி பீடத்தின் அதிவணக்கத்துக்குரிய வெண்டறுவே தர்மகீர்த்தி ஸ்ரீ ரதனபால உபாலி அபிதான அனுநாயக்க தேரர் அவர்கள்
2. மல்வத்து பீடத்தின் பதிவாளர் கலாநிதி வணக்கத்துக்குரிய பஹமுணே சுமங்கல நாயக்க தேரர் அவர்கள்
3. அஸ்கிரி பீடத்தின் பதிவாளர் கலாநிதி வணக்கத்துக்குரிய மெதகம தம்மானந்த நாயக்க தேரர் அவர்கள்
4. மல்வத்து பீடத்தின் நிருவாகசபை உறுப்பினர் கௌரவ கலைமாணி அம்பன்வெல்லே ஸ்ரீ சுமங்கல தேரர் அவர்கள்

இரண்டாயிரத்து இருபதாம் ஆண்டு ஓகத்து மாதம் 19 ஆந் திகதியாகிய இன்று இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பகிரங்க இலச்சினையின் கீழ் கொழும்பில் வழங்கப்பட்டது.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

**பீ. பி. ஜயசுந்தர,**
சனாதிபதியின் செயலாளர்.

9-190

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.